தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில் மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி மையத்தை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, டி.ஆர்.ஓ தெ.தியாகராஜன், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண் இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ஜெ.டேவிட் டேனியல் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

தமிழ்நாடு மாவட்டம், திருமானூர் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.

அணைக்கட்டுத் தொகுதியில்

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவீர்!

சட்டப்பேரவையில் அணைக்கட்டு - ஏ.பி.நந்தகுமார் வலியுறுத்தல்!

சென்னை, அக்.17- சட்டப்பேரவையில் அணைக்கட்டுத் தொகுதி உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு நகராட்சித் துறை அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

ஏ.பி.நந்தகுமார்: வேலூர் மாவட்டம், வெயிலூர் மாவட்டம். குடிப்பதற்கு தண்ணீர் பிரச்சினை இருந்த காலத்தில் 2011ல் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் PHASEIஐத் தந்து வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் தந்தவர் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) PHASEII இரண்டாவது கட்டமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சற்றுமுன் அறிவித்தபொழுது ஜப்பான் நாட்டின் நிதியோடு PHASEII நிறைவேற்றித் தருவோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய 59 கிராம ஊராட்சிகளிலும் அந்தத் திட்டத்தை சேர்த்து காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை அந்த மக்களும் பருகக்கூடிய வகையிலே நீங்கள் செய்து தருவீர்களா?

அமைச்சர் கே.என்.நேரு: முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முழுமையான அனைத்து கிராமங்களுக்கும் தருவதற்காக இந்த இரண்டாவது திட்டம் தொடங்கப்பட்டது. அது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கேட்டிருப்பது திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம், விழுப்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக கிட்டத்தட்ட 13,000 கோடி ரூபாய் அதற்காக திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளுக்கு திட்ட அறிக்கைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒன்றிய அரசினுடைய அனுமதிக்காகத்தான், அதனுடைய பங்குத் தொகைக் காகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி வருகிற போது திருவண்ணா மலைக்குச் செல்கிறபோது வழியில் இருக்கிற வேலூர் மாவட்டத்தில் இருக்கிற விடுபட்ட பகுதிகளுக்கு அந்தக் குடிநீர்த் திட்டம் தருவதுபோல தான் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவாக ஒன்றிய அரசினுடைய பங்குத் தொகை கிடைக்குமோ அவ்வளவு விரைவாக, மாநில அரசைப் பொறுத்தவரை பங்குத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, அது கிடைத்தவுடன் உரிய முறையில் அந்தத் திட்டம் ஆரம்பிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கும்பகோணம் தொகுதியில்

ஆரம்ப சுகாதார மையத்தை மீண்டும் தொடங்கிட வேண்டும்!

சட்டப் பேரவையில் சாக்கோட்டை க.அன்பழகன் கோரிக்கை!

சென்னை, அக். 18 - சட்டப் பேரவையில் கும்பகோணம் - சாக்கோட்டை க.அன்பழகன் கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:

சாக்கோட்டை க. அன்பழகன்: இன்றைய முதல்வர் நாளை, நாளை மட்டுமல்ல என்றைக்கும் அவர்தான் முதல்வர் என்று அவரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் தொகுதியில் மிகவும் பின்தங்கிய குக்கிராமங்களாக இருக்கிற அத்தியூர், ஆளூர், குருகூர் போன்ற 10 ஊர்களுக்கும் மேலாக இருக்கிற அந்த பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்தை என்ன காரணத்தினாலோ பல ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்து விட்டார்கள். அந்த பகுதி மக்களுக்கு மீண்டும் சுகாதாரம் கிடைப்பதற்காக அமைச்சர் அவர்கள் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவாரா என்பதையும், கடந்த காலங்களில் இங்கே நான் பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றியத்திற்கு 50 ஆரம்ப சுகாதார நிலையம் என்று கேட்டிருக்கிறோம். கிடைக்கும், கிடைத்தால் உடனடியாக கும்பகோணத்திற்கு தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். சொன்ன வார்த்தையை மீறாத நம்முடைய அமைச்சர் அவர்களும் சொன்னதையும், சொல்லாததையும் சேர்த்து செய்கிற நம்முடைய அரசையும் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை செய்து கொடுப்பாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: மிக நீண்ட காலத்திற்கு பிறகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு கடந்த ஜூலை, திங்கள் மூன்றாம் தேதி ஊரக மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 50 கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தற்போது ஒன்றிய அரசின் அலுவலர்களிடத்திலும், அமைச்சர்களிடத்திலும் தமிழ்நாட்டிற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று கேட்கிற போது அவர்கள் சொல்லுவது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 8,713 துணை சுகாதார நிலையங்களும், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஆக மொத்தம் 11,049 ஆரம்ப சுகாதார கட்டமைப்புகள் இருக்கின்றன. வட மாநிலங்களில் இதில் பாதிகூட இல்லை. எனவே, உங்களுக்கு தற்போது கொஞ்சம் காலம் தாழ்த்தி தருகிறோம் என்றெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய தேவைகள் குறித்த கடிதத்தை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி கொடுத்திருக்கிறோம். அப்படி வரும் போது நிச்சயம் எங்கெல்லாம் விதிமுறை களின்படி அமையவேண்டுமோ, அங்கெல்லாம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

மானாமதுரை தொகுதியில்

தடுப்பணை கட்டும் பணியை விரைவுபடுத்துவீர்!

சட்டப் பேரவையில் திருமதி ஆ.தமிழரசி வலியுறுத்தல்!

சென்னை, அக். 18 – சட்டப் பேரவையில் மானாமதுரை ஆ.தமிழரசி கேட்ட கேள்வியும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:–

திருமதி ஆ. தமிழரசி: முதலில் தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர், அவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் கேட்ட பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன், என்னுடைய தொகுதியில் மளவாரநந்தல், செம்பியாரநந்தல், இடைகாட்டூர், பதினெட்டாம் கோட்டை ஆகிய பகுதிகளில் 1,000 ஏக்கர் பாசன வசதி பெற்று பயன்பெறும் முகமாக, தடுப்பணை கட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை அமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: அப்படியே ஆகட்டும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் தொகுதியில்

இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டப்படுமா?

சட்டப்பேரவையில் க.சொ.க.கண்ணன் கேள்வி!

சென்னை, அக். 18- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஜெயங்கொண்டம் க.சொ.க.கண்ணன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-

க.சொ.க.கண்ணன்: எனது ஜெயங்கொண்டம் தொகுதியில், ஜெயங் கொண்டம் நகரில், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான, ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ஒட்டு கட்டடம் உள்ளது, ஆய்வு மாளிகையாக உள்ளது. அந்த ஆய்வு மாளிகை கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வருகை தந்துள்ளபோது, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை சீரமைத்துத் தந்தார்கள். இருந்தாலும், அதிலே ஒரு அறைதான் உள்ளது. அங்கே ஜெயங் கொண்டம் பகுதியிலே, மாமன்னர் இராஜேந்திர சோழன் கட்டமைத்த பிரகதீஸ்வரர் ஆலயம் மற்றும் பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளதால், அடிக்கடி ஜெயங்கொண்டம் பகுதிக்கு அரசு அதிகாரிகளும், முக்கிய பிரமுகர்களும் வரக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கூடுதலாக நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில், இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகையைக் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் சுற்றுலா மாளிகை என்பது, ஏற்கெனவே பிரிட்டிஷ்காரர் காலத்திலே கட்டப்பட்டு, ரொம்ப மோசமான நிலையில் இருந்தது. யாரும் தங்க முடியாத நிலையில்கூட இருந்தது அது. ஒருமுறை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கழக வளர்ச்சிக்காக நான் நாடகம் போடுகிற போது அந்த ஊரிலே நாடகம் போட்டேன். அந்தச் சுற்றுலா மாளிகையிலே நானே அதிலே தங்கியிருக்கிறேன். ஆனால், இப்படி இருக்கிறது. ஆனால், அந்தச் சுற்றுலா மாளிகை பிரிட்டிஷ் காரர் காலத்தில் கட்டப்பட்ட மாளிகையாக இருந்தாலும், இப்போதெல்லாம் 100 ஆண்டுகாலம் முடிந்தால் ICONIC PROJECT என்று எடுத்து நாம் செய்கிறோம். அதுமாதிரி நீங்கள் செய்யுங்கள் என்றார். அதற்கு அதன டிப்படையிலே அதற்காக பணமும் ஒதுக்கித் தந்தார்கள். அதற்கு பின்னால், அந்த ஒரு அறை என்பது VIPக்குரிய அறை. அதனால் இன்னும் 2 அறைகள் நாங்கள் அதைத் தயார் செய்தோம். இப்போது ஆது INTERNATIONAL STANDARDல் இருக்கிறது, இப்போது அந்த சுற்றுலா மாளிகை. ஆனால், ஒரு அறை இல்லை. ஒரு VIP அறை ஒன்றிருக்கிறது. அது இல்லாமல் 2 அறைகளும், அதிலே ஏற்கெனவே நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆக, 3 அறைகள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கு அது போதுமானது தான். ஆனாலும், புதிய ஒரு சுற்றுலா மாளிகை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, அடுத்த நிதியாண்டிலே, அதை செய்ய முடியுமா என்று ஆலோசித்து முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பாலக்கரை பெண்கள் மத்திய சிறையை மாற்றி - அப்பகுதியில்

காந்தி மார்க்கெட் விரிவாக்கம் செய்யப்படுமா?

சட்டப் பேரவையில் - இனிகோ இருதயராஜ் கேள்வி!

சென்னை, அக்.18– சட்டப் பேரவையில் உறுப்பினர் இனிகோ இருதய ராஜ் கேட்ட கேள்வியும் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:–

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: திருச்சியின் மையப்பகுதியான பாலக்கரை பகுதியிலே பெண்கள் மத்திய சிறைச் சாலை உள்ளது. நமது அறிவிப்பின்படி பெண்கள் மத்திய சிறைச் சாலையை திருச்சிக்கு வெளியே கொண்டுசென்றுவிட்டு, அந்தப் பகுதியில் Gandhi Market விரிவாக்கம் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறோம். அந்த அறிவிப்பு எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எஸ். ரகுபதி: பெண்கள் சிறைச் சாலையை தனி இடத்திற்கு கொண்டுசெல்வதற்காக இடம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டிருக்கின்றோம். இடம் கிடைத்தால் அதற்குப்பிறகு அங்கே கட்டடங்கள் கட்டி சிறைச் சாலை மாற்றித்தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சேலம் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர்

தங்கமுத்து மனைவி சரஸ்வதி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சேலம், அக்.18- சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவரும்,3 முறை முன்னாள் சங்ககிரி ஒன்றிய கழக செயலாளரும், 2முறை முன்னாள் சின்ன கவுண்டனூர் ஊராட்சி மன்ற தலைவருமான,முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் பி. தங்கமுத்து அவர்களின் மனைவி டி.சரஸ்வதி அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) வியாழக்கிழமை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தகவலறிந்தும் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நியாய விலைக்கடையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கூட்டுறவுத்துறையின் சார்பில் இராசிபுரம் வட்டத்தைச் சேர்ந்த 22,264 பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் நகர் மன்றத் தலைவர் கவிதா சங்கர், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் க.பா.அருளரசு மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், திருக்களாச்சேரியில் நடைப்பெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் சிறப்பு முகாமில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பொது மக்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு கண்டு பயனாளிகளிடம் வழங்கினார் நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக்,பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட்மற்றும் பலர் உள்ளனர்.